சுத்தமானது! சுகாதாரமானது!! சமையலுக்கு சிறந்தது!!!
சைக்கிள் பிராண்டு
அக்மார்க் மஞ்சள் & மஞ்சள் தூள்

Since 1976 The Premium Quality AN ISO 9001 : 2008 Certified company
தயாரிப்பாளர் :
R.J.M. ஹாஜி முஹம்மது இப்ராஹீம் சன்
42, கிழக்கு கொங்காலம்மன் கோவில் வீதி
ஈரோடு – 638 001 (தமிழ் நாடு)
போன் : 0424 – 2214062 | செல் : 94430 27860
E-mail : cyclebrand@bsnl.in Web : www.cyclebrandturmeric.com
ஏஜெண்டுகள், விநியோகஸ்தர்கள் வரவேற்கப்படுகின்றனர்



உண்மை சொல்வோம் நன்மை செய்வோம்

# மணிச்சுடர்

MANICHUDAR TAMIL DAILY

நிறுவனர் : மர்ஹூம் சிராஜுல் மில்லத் ஆ.கா.அ. அப்துஸ் ஸமது
https://www.facebook.com/Manichudardailypaper

RNI 42728/1987 | REGD. No.TN/CNI GPO/076/2020-2022
WPP No. TN/PMG(CCR)/WPP 643/20-22



ZAM ZAM REAL ESTATE

ALHAJEE S.M. BATHRUTHEEN

வாய்மையும் நம்பிக்கையும் பெற்ற வளம் மிகுந்த நிறுவனம்
கட்டிடங்கள் வாங்க - விற்க வாடகை வசூல் செய்ய புகழ் பெற்றது
பு.எண்: 76 (ப.எண்: 233) பீட்டர்ஸ் ரோடு, ராயபேட்டை, சென்னை - 600 014.
போன் : 044 - +91 44 2848 0697 / 4330 2522
E-mail : zamzam501@rediffmail.com www.zamzamrealestate.com




## ▮ இடஒதுக்கீடு கொள்கையை எந்த விலைகொடுத்தும் பாதுகாப்போம்

## ▮ மாநில உரிமைகளை நிலைநிறுத்த எந்தஒரு சவாலையும் எதிர்கொள்ள தயார்

## ▮ கூட்டாட்சி உரிமைகளை பாதுகாக்க தொடர்ந்து போராடி வருகிறோம்

## ▮ தேர்தலுக்கு பின்னரும் வலதுசாரி சக்திகளை தொடர்ந்து எதிர்ப்போம்

# மத பிளவுகளை உருவாக்கும் பிற்போக்கு சக்திகளுக்கு தமிழகத்தில் இடமில்லை

## இ.யூ. முஸ்லிம் லீக் தேர்தல் நிதி திட்டம்! ஒரு நோட்டு! ஒரு ஓட்டு!

### நீங்கள் தரும் ஒவ்வொரு நோட்டும் தேர்தல் நிதிக்கு பரக்கத் தரும்

தமிழகச் சட்டப் பேரவைக்கான தேர்தல் ஏப்ரல் 6 செவ்வாய்க்கிழமை நடக்கவிருக்கிறது. இன்று முதல் (6.3.2021) சரியாக ஒரே ஒரு மாதம்தான்! தேர்தல் திருவிழா முடிந்துவிடும்!

தமிழகத்தில் திமுக அமைத்துள்ள மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் இ. யூ. முஸ்லிம். லீக் இடம் பெற்று, மூன்று தொகுதிகள் வழங்கப்பட்டுள்ளது.

இ. யூ. முஸ்லிம் லீகிற்கு 3 தொகுதிகள் தானா? எனக் கேட்போரும் உள்ளனர், என்ன வெறும் 3 தொகுதிகள் என முனுமுனுப்போரும் இருக்கிறார்கள்.

தமிழகத்தில் குறைந்த பட்டசம் 50இலட்சம் முஸ்லிம் வாக்காளர்கள் இருக்கும் போது, மூன்று தொகுதி தானா? எனப் பாடம் நடத்த முன்வருவோம்'' சமுதாயத்தில் இருக்கவே செய்வர்.

தமிழகத்தில் பா.ஜ.க. நிழலில் அடங்கிக் கிடக்கும் அ.இ.அ. தி. மு. க அரசைப் பொருட்காட்சிக்கு அனுப்பிவைத்திடவும், மாநிலத்திலும் தேசிய அளவிலும் மாநில சுயாட்சி, மத்தியில் கூட்டாசி முழக்கத்தை எழுப்பும் தி. மு. க தலைமையிலான நல்லாட்சியைக் காட்சிப்படுத்தவும். இ. யூ. முஸ்லிம் லீக் முடிவு எடுத்து சமுதாய மக்களுக்கும் நாட்டு மக்களுக்கும் அறிவித்திருக்கிறது.

எத்தனை தொகுதி என்பது இ. யூ. முஸ்லிம் லீகிற்குப் பிரச்சனை இல்லை! தி. மு. க அமைத்துள்ள மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் இ. யூ. முஸ்லிம் லீக் இடம் பெறுவதே முக்கியமானதாகும். இடம் பெற்ற பிறகு ஒன்று அல்லது இரண்டு தொகுதிகளில் நின்றாலே கூட்டணியில் இருப்பதாகத்தான் பொருந்தும். சமுதாய மக்களின் மன ஓட்டத்திற்கும் மதிப்பளிக்கும் வகையிலே மூன்றுக்கு ஒப்புக் கொண்டது இ. யூ. முஸ்லிம் லீக். இவ்வாறு ஒப்புக்கொள்வதில் எவ்வித மரியாதைப் பிரச்சனையும் இல்லை. திமுகாவை ஆட்சிக் கட்டிலில் அமர்த்துவதற்கு முடிவு செய்துவிட்ட பிறகு மூன்றில் நின்றால் என்ன, முப்பதில் நின்றால் என்ன எல்லாமும் ஒன்றுதான் என்று தெளிவான சிந்தனையோடுதான் இ. யூ. முஸ்லிம் லீக் பயணிக்கிறது.

குழம்பிய சிந்தனைக் கும்பலின் தேவையற்ற விவாதங்களில் இ. யூ. முஸ்லிம் லீகினர் ஈடுபடுவதைத் தவிர்க்குமாறு அன்பு வேண்டுகோள் வைக்கிறோம்.

இன்றைக்குள்ள ஒற்றைத் தேவை, தமிழகத்தில் 234 தொகுதிகலும் தி.மு. க கூட்ணி வேட்பாளர்கள் வெற்றி பெறச் செய்வதற்கு என்ன வழி? என்ன வியூகம்? என்ன உத்தி? என்ன வகைப் பரப்புரை? எவ்வித செயல்பாடு? இதை பற்றியே சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

வெற்றிக்கான வித்து எது? என வினவியவர்களுக்கு எந்தவொரு செயலைச் செய்தாலும், அதில் தனது முழுமனதும் ஈடுபட வேண்டும்; முழு இதயமும் ஈடுபட வேண்டும்; முழு அறிவும் ஈடுபட வேண்டும்; முழு ஆன்மாவும் ஈடுபட வேண்டும்! சுருங்கச் சொல்வதானால், அந்தக் காலத்தில் சொல்வார்களே, உடல், பொருள், ஆவி, மனம், மொழி, மெய் எல்லாமும் ஒரு சேர ஒரு செயலில் ஈடுபட வேண்டும்! அவ்வாறு செய்தால்தான் சிந்தனை ஒரு முகமாகும்! செயல்பாட்டுக்கு ஆற்றல் பெருகும்! வெற்றியே இலட்சியமாகிவிடும்!

நான் தொடர்ந்து நினைவுபடுத்தி வருவது தேர்தலில் வெற்றி பெறுவதும், அதற்கு இன்றைக்குத் தேவைப்படும் ஆயுதம் பற்றியுமே என்பதை அறிவீர்கள்! அந்தக் காலத்தில் சண்டை, சமர், போர்க்களம் என்றால் கல்லும் மண்ணும் ஆயுதமாகியிருந்தது; பின்னர் கம்பும் கழியும் கத்தியும் கருவியாயிருந்தது. பின்னர் வாளும் வேலும் அம்பும் ஆயுதங்களாயின! பின்னர் துப்பாக்கி, பீரங்கி என வந்தன; பின்னர் குண்டுகள், அணுகுண்டுகள், ஹைட்ரஜன் குண்டுகள் என்று ஆகியுள்ளன. இன்றைக்கு இயற்கைப் பேரிடர்களான புயல், வெள்ளம், சுனாமி போன்றவற்றைக்கூட ஏவி விடும் விஞ் ஞான வளர்ச்சி ஏற்பட்டுள்ளதாகச் சொல்கிறார்கள்.

போர்க்கள வரலாற்றில் இத்தகைய மாற்றங்கள் இருப்பதுபோல வேதான், தேர்தல் களத்திலும் பயன்படுத்தும் ஆயுதங்கள் மாறிக் கொண்டே இருக்கின்றன. இன்றைக்குள்ள தேர்தல் முறையில் பணபலம் என்பது தவிர்க்க முடியாதது ஆகிவிட்டது!

இ.யூ. முஸ்லிம் லீக் இவ்வளவு காலமாகப் பணபலம் பற்றிச் சிந்தித்ததே இல்லை. இந்தத் தேர்தலில்தான் கையில் கொஞ்சமாவது தேர்தல் நிதி இருந்தால்தான் கட்சிப் பேரையும், இ.யூ. முஸ்லிம் லீகின் ஏணிச் சின்னத்தையும் தொகுதி வாக்காளர்கள் மத்தியில் கொண்டு செல்ல முடியும் என்ற நிலை ஏற்பட்டுவிட்டது! இதற்காகத்தான் பெருமனம் கொண்ட நல்லுள்ளங்களுக்கு எங்களின் வேண்டுகோளைச் சமர்ப்பிக்கிறோம்!

ஒவ்வொருவரும் குறைந்தது நூறு ரூபாய் கொடுங்கள்! அது வெறும் நோட்டு அல்ல! தமிழகத்தில் தி.மு.க. கூட்டணி பெறப்போகும் வெற்றியை நிர்ணயிக்கும் ஓட்டு! ஒரு ஓட்டில் வெற்றி பெற்ற வரலாறுகளை அருள்கூர்ந்து எண்ணிப் பாருங்கள்!

ஒரு நூறு ரூபாய் நோட்டு கொடுத்துவிட்டால் வெற்றி வந்துவிடுமா? என்று சமுசயப்படுவோர்க்கும் சரித்திரச் சம்பவம் ஒன்றை நினைவுபடுத்தலாம் எனக் கருதுகிறேன்.

பொருமானார் (ஸல்) அவர்களின் இறுதிக் காலத்தில் 'தபுக்' யுத்தத்திற்கு பெரும் முயற்சி செய்யப்பட்டது. மதினாவாசிகளிடமிருந்து யுத்த நிதியை நபியவர்கள் கோரியிருந்தார்கள். சகாபாக்கள் என்னும் நபித் தோழர்கள் தத்தமது பொருட்களைக் கொண்டு வந்து 'மஸ்ஜிது நபவி' பள்ளியில் குவித்துக் கொண்டிருந்தார்கள். பேரீச்சம் பழக்குலை மலைமேல் குவிந்திருந்தது! பெருங்கூட்டமாக நபித் தோழர்கள் பள்ளியின் உள்ளேயும் வெளியேயும் நின்று கொண்டிருந்தார்கள். அந்தப் பெரிய கூட்டத்தில் ஒரு நபித் தோழர் பள்ளியின் நுழைவாயிலில் நின்று கொண்டு, தலையை நீட்டுவதும், ஒதுங்கிக் கொள்வதுமாக இருந்தார். அனைத்தையும் நோக்கும் ஆற்றல் பெற்ற அண்ணலார், அந்த நபித்தோழரைப் பார்த்துவிட்டார்கள்! 'தோழரே! வாருங்கள்! ஏன் தயங்கித் தயங்கி நிற்கிறீர்கள்!' என்று கூறி அழைப்பு விடுத்தார்கள்.

அந்த நபித் தோழர் நபியின் முன்னர் வந்தார்! இரு கரங்களிலும் பேரீச்சம் பழங்களை வைத்திருந்தார்! இரண்டு கைகளிலுல் கயிறு அழுத்திய காயங்களில் இரத்தம் கசிந்து கொண்டிருந்தது! ''தோழரே!'' என்று நபியவர்கள் அழைத்தார்கள்!

''யாரசூலுல்லாஹ்'' யுத்த நிதிக்குக் கொடுப்பதற்கு என்னிடம் ஒன்றுமே இல்லை. இன்று காலையில் ஒரு யூதரிடம் வேலை கேட்டுப் போனேன். அவர் தோட்டத்துக்கு கேணியில் நீர் இறைக்கும்படி சொன்னார். ஒரு வாளி தண்ணீருக்கு ஒரே ஒரு பேரீச்சம் பழம் கூலி என்றார். காலையில் இருந்து இப்போது வரை நீர் இறைத்துக் கூலியாகப் பெற்றுள்ள இந்த இரண்டு செரங்கைப் பேரீச்சம் பழத்துடன் இங்கே வந்தேன். மஸஜிதுக்குள் மலைபோல் பேரீச்சம் பழம் குவிந்திருப்பதைப் பார்த்துத் தயக்கத்துடன் நின்றேன் யாரசூரல்லாஹ்!'' என்றார்.

நபியவர்கள் அத்தத் தோழரை அருகில் அழைத்து அன்பு மொழி பேசி ஆரத்தழுவி அவர் தந்த பேரீச்சம் கனிகளைத் தங்களின் திருக்கரங்களால் பெற்று, அவற்றை மஸ்ஜிதுக்குள் மலைபோல் குவிந்திருக்கும் பேரீச்சம்பழக் குவியலின்மீது தெளித்துச் சொன்னார்கள். இங்கு குவிந்திருக்கும் பேரீச்சம் பழ மலை, இத்த தோழர் கொண்டு வந்த பேரீச்சம்பழங்களால் 'பரக்கத்' (வளர்ச்சி) பெற்றுவிட்டது!'' என்றார்கள்.

தபுக் யுத்த நிதி வரலாறு வரும் தேர்தல் நிதி வரலாறாகத் திரும்ப வேண்டும்!

ஒரு நூறு ரூபாய் நோட்டுத்தானே! என்று யாரும் வாளாயிருந்திட வேண்டாம்! நீங்கள் தரும் ஒவ்வொரு நோட்டும் தேர்தல் நிதிக்கு 'பரக்கத்' (வளர்ச்சி) தரும்!

**– கே.எம்.கே.**

### இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேர்தல் நிதி திட்டம்!

| எண்: | பெயர் | நோட்டு (ரூபாயில்) | ஓட்டு |
|---|---|---|---|
| 8. | கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் எம்.எல்.ஏ. | 10,000 | 100 |
| 9. | ஏ.எஸ். அப்துர் ரஹ்மான் ரப்பானி, லால்பேட்டை | 10,000 | 100 |
| 10. | ஹாஜி ஏ. வருசை முகம்மது, இராமநாதபுரம் | 3,000 | 30 |
| 11. | எஸ்.ஜே. மஹ்மூதுல் ஹஸன், காயல்பட்டினம் | 3,000 | 30 |
| 12. | எஸ். கதியத்துல்லாஹ், இராமநாதபுரம் | 5,000 | 50 |
| 13. | மணிச்சுடர் எம்.கே. ஷாகுல் ஹமீது, திருச்சி | 5,000 | 50 |
| 14. | கே. அப்துல் சுக்கூர், துறைமுகம் | 500 | 5 |
| 15. | வி.ஆர். முஹம்மது இப்ராஹிம், கோட்டக்குப்பம் | 5,100 | 51 |
| 16. | மௌலானா கே. முஹம்மது கஸ்ஸாலி, திருநெல்வேலி | 1,000 | 10 |

(தொடரும்)

**நிதி அனுப்ப வேண்டிய முகவரி :**

BANK NAME : UNION BANK OF INDIA,
BRANCH NAME : CHENNAI MAIN-2
ACCOUNT NAME : IUML TN ELECTION FUND
ACCOUNT NUMBER : 034811100002661
IFSC CODE : UBIN0803481
SWIFT No. : UBININBBMAD


## ''டி.டி நெக்ஸ்ட்'' ஆங்கில நாளிதழுக்கு தி.மு.க. தலைவர் மு.கஸ்டாலின் சிறப்புப் பேட்டி

சென்னை, மார்ச்6 -

**மத பிளவுகளை உருவாக்கும் பிற்போக்கு சக்திகளுக்கு தமிழகத்தில் இடமில்லை என்று ''டி.டி நெக்ஸ்ட்'' ஆங்கில நாளிதழுக்கு அளித்த சிறப்புப் பேட்டியில் தி.மு.க. தலைவர் மு.கஸ்டாலின் தெரிவித்துள்ளார்.**

அப்பேட்டி விவரம் வருமாறு :-

எதிர்வரும் சட்ட மன்றத் தேர்தலில் தி.மு.க. இளைஞரணிச் செயலாளர் உதயநிதி, சேப்பாக்கம் தொகுதியில் போட்டியிடவுள்ளார் என்று ஊடகங்களில் செய்திகள் பரவிவரும் வேளையில் 'டிடிநெக்ஸ்ட்' ஆங்கில நாளிதழுக்கு, அதன் செய்தியாளர் ஆ. கார்த்திகேயனுக்கு அளித்த சிறப்புப்பேட்டியில் தி.மு.க தலைவர் முகஸ்டாலின், தனது மகனின் அரசியல் பயணம்அவரது செயல் திறனை அடிப்படையாகக் கொண்டு மட்டுமே முடிவு செய்யப்படும் என்றும், அதனை தமிழக மக்கள்தான்முடிவு செய்வார்கள், நான் அல்ல என்றும்தெரிவித்தார்.




ஆளும் அதிமுக, பாஜ.கவின் பிடியில்சிக்கியிருப்பது பற்றி அவர் பேசும்போது, காவிக்கட்சியை எதிர்ப்பதில் தனது கட்சியின் உறுதிப் பாட்டை மீண்டும் உறுதி செய்தார்.

**கேள்வி: எம்.டெக். சேர்க்கையில் மத்திய அரசின் 49.5 சதவிகித இட ஒதுக்கீடு கொள்கையை பின்பற்றுமாறு அண்ணா பல்கலைக் கழகத்திற்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது. 2024 வரை பா.ஜ.க. ஆட்சியில் இருக்கப் போகிறது. தமிழகம் பின்பற்றும் 69சதவிகித இடஒதுக் கீட்டைப் பாதுகாக்கஉங்கள் திட்டங்கள் என்ன ?**

முகஸ்டாலின் : வரலாற்று ரீதியாக திமுக. கூட்டாட்சி உரிமைகளைப் பாதுகாக்கப் போராடி வருகிறது.மேலும் மாநில சுயாட்சியை அழிக்கவும், மாநிலத்தின் உரிமைகளைக் குறைக்கவும் விரும்புவோருடன் உறவு வைத்திருக்கும் அதிமுகவைப் போலல்லாமல், மாநில நலனுக்காக எப்போதும் உறுதியுடன் நிற்கிறது. மத்தியில் பாஜகவுடன் கூட்டணியாக நின்றதன் மூலம், அதிமுக. என்னசாதித்தது? மதுரையில் எய்ம்ஸ் கட்டுமானம் இரண்டு ஆண்டுகளாக நிறுத்தப் பட்டுள்ளது. ஜிஎஸ்டி திணிப்பு கோடிக்கணக்கான மக்களின் வாழ்வாதாரங்களைப் பாதித்துள்ளது. அதன் மூலம் தமிழகத்திற்கு வரவேண்டிய உரிய பங்கு நிதி கூட வழங்கப்படவில்லை. நீட் - ஐ கொண்டுவந்து அனைத்து வித தீமைகளுக்கும் வழிவகுத்தது. இந்தி / சமஸ்கிருத திணிப்புக்கான கருவியாகவும், மாநில சுயாட்சிமீதான நேரடித் தாக்கு தலாகவும் இருக்கும்புதிய கல்விக் கொள்கையை அவர்கள் எதிர்க்கவில்லை. நாடு முழுவதும் விவசாயிகள் கண்டிக்கும் புதிய வேளாண்மைச் சட்டங்களை, அவர்கள் ஆதரிக்கின்றனர். அதிமுக. வைப் போலன்றி, திமுக. மத்தியஅரசுக்கு அடி பணியாது. அடிபணிய வைக்கும் ஒவ்வொரு முயற்சியையும் நாங்கள் எதிர்ப்போம், எங்கள் இடஒதுக்கீடு கொள்கையை எந்த விலை கொடுத்தாகிலும் பாதுகாப்போம். மாநில உரிமைகளை பாதிக்கும் நோக்கில் எந்தவொரு சவாலையும் எதிர்கொள்ள திமுக. எப்போதும் தயாராக உள்ளது. நட்பிற்கு நாங்கள் எப்போதும் கரம் கொடுப்போம், எங்கள் உரிமைகளுக்காக குரல் எழுப்ப நாங்கள் என்றும் தயங்க மாட்டோம். வலதுசாரிசக்திகளுக்கு எதிரான குற்றச் சாட்டுக்குதலைமை தாங்கும் கட்சிகளில் ஒன்றாகதிமுக. காணப்பட்டது

**கேள்வி : தேர்தலுக்குப் பின்னர்வலதுசாரி சக்திகளை தி.மு.க.தொடர்ந்து எதிர்க் குமா ?**

**மு.க.ஸ்டாலின் :** நிச்சயமாக! அதில்எந்த சந்தேகமும் இல்லை. திமுக எப்போதும்சமூக நீதிக்காக நிற்கும். மாநிலத்தில் சமத்துவமின்மை, மத பிளவுகள் அல்லது எந்தவிதமான அடக்கு முறையின் விதைகளை விதைக்க முயற்சிக்கும் எவரும் கடுமையாக எதிர்க்கப் படுவார்கள். இத்தகைய பிற்போக்கு கூறுகளுக்கு நம் மாநிலத்தில் இடமில்லை. எந்த அடிப்படை வாத


(முதல் பக்கத் தொடர்ச்சி)


## மாற்றுக்கருத்து, விவாதம், சர்ச்சை இந்திய ஜனநாயகத்தின் ஓர் அங்கம்

# அனைத்து குடிமக்களும் எவ்வித பாரபட்சமுமின்றி சமமாக மதிக்கப்படுகிறார்கள்

## ஃப்ரீடம் ஹவுஸ் அறிக்கைக்கு மத்திய அரசு பதிலடி

புதுடெல்லி,மார்ச்6-

அனைத்து குடிமக்களும் எவ்வித பாரபட்சமுமின்றி இந்தியாவில் சமமாக மதிக்கப்படுகிறார்கள் என்று ஃப்ரீடம் ஹவுஸ் அறிக்கைக்கு மத்திய அரசு பதிலடி கொடுத்துள்ளது.

இந்தியா சுதந்திரமுள்ள நாடு என்ற அந்தஸ்திலிருந்து 2020-ஆம் ஆண்டில் ஓரளவிற்கு சுதந்திரமுள்ள நாடாக உள்ளது என்று ஜனநாயக பார்வை என்ற தலைப்பில் ஃப்ரீடம் ஹவுஸ் வெளியிட்ட கட்டுரையில் தெரிவிக்கப்பட்டு இருந்தது. இந்த தகவல் மக்களை திசைத்திருப்பக்கூடியது என்றும் தவறானது என்றும் இந்தியா வன்மையாக மறுத்துள்ளது.

'உலகில் சுதந்திரம்' என்ற தலைப்பில் 210 நாடுகள் மற்றும் பிரதேசங்களில் அரசியல் மற்றும் மக்கள் உரிமைகள் குறித்த அறிக்கையில் மார்ச் 3-ந்தேதி அன்று ஒரு அறிக்கை வெளியிட்டது. அதில் இந்தியா 'ஓரளவிற்கு சுதந்திரம் உள்ள நாடு' என்று வகைப்படுத்தப்பட்டிருந்தது.

இதற்குஎதிர்ப்புதெரிவித்து இந்தியா வெளியிட்ட அறிக்கையில், ''அரசியல் அமைப்பு சட்ட மாண்புகள் படி இந்தியாவில் அனைத்து குடிமக்களும் சமமாக மதிக்கப்படுகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. தேசதுரோக சட்டம் தவறாக பயன்படுத்தப்படுகிறது என்ற தகவலுக்கும் இந்தியா மறுப்பு தெரிவித்துள்ளது.

மத்திய அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில், ''கொரோனா பாதிப்பு மிகவும் குறைவாக உள்ள நாடுகளில் இந்தியாவும் ஒன்று'' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்வியாளர்கள், பத்திகையாளர்கள், மாற்று கருத்து தெரிவிக்கும் ஊடகங்கள் மீதான மிரட்டல்கள் கடந்த ஆண்டு அதிகரித்துள்ளது என்ற குற்றச்சாட்டுக்கு பதில் அளிக்கும் வகையில், ''இந்தியாவில் மாற்று கருத்து, விவாதம் மற்றும் சர்ச்சை ஜனநாயகத்தின் ஓர் முக்கிய அங்கம்'' என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

## 'ஜூம்' இணையதளம் வழியாக இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய அரசியல் ஆலோசனைக் கூட்டம்



இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய அரசியல் ஆலோசனைக் கூட்டம் பி.ஏ.சி. சேர்மன் பானக்காடு செய்யது ஹைதர்அலி சிஹாப் தங்ஙள் தலைமையில் 'ஜூம்' இணையதள வழியாக 6.3.2021 சனிக்கிழமை நடைபெற்றது. தேசிய தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன், தேசிய பொதுச் செயலாளர் பி.கே. குஞ்ஞாலிக்குட்டி, தேசிய அமைப்புச் செயலாளர் இ.டி. முஹம்மது பஷீர் எம்.பி., தேசிய பொருளாளர் பி.வி. அப்துல் வஹாப் எம்.பி., தேசிய செயலாளர் ஹெச். அப்துல் பாசித், தமிழ்நாடு மாநில பொதுச் செயலாளர் கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் எம்.எல்.ஏ., பொருளாளர் எம்.எஸ்.ஏ. ஷாஜஹான், முதன்மை துணைத் தலைவர் எம். அப்துர் ரஹ்மான் மற்றும் கமிட்டி உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் சமீபத்தில் நடைபெறவுள்ள தமிழ்நாடு, கேரளா, அஸ்ஸாம், மேற்கு வங்காளம், புதுச்சேரி ஆகிய 5 மாநில தேர்தல்கள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது.

## அல்-குர்ஆன்

அமுதமொழி

### 57. அல்ஹதீத்-இரும்பு
(மதனி 94) வசனங்கள்: 29

**அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருநாமத்தால்**

27. ஆகவே, (சென்றுபோன நூஹ், இப்ராஹீம் முக்குப் பின்னர்) அவர்களுடைய வழியைப் பின்பற்றி (நடக்கக்கூடிய பல) தூதர்களை ஒருவருக்குப் பின் ஒருவராக அனுப்பிவைத்தோம். அவ்வாறே, மர்யமுடைய மகன் ஈஸாவையும் (அவர்களுக்குப் பின்னர். அவர்களைப் பின்பற்றி நடக்குமாறு) அனுப்பிவைத்தோம். அவருக்கு இன்ஜீலையும் கொடுத்தோம் . இவரைப் பின்பற்றியவர்களுடைய உள்ளங்களில்,கருணையையும் இரக்கத்தையும் உண்டு பண்ணினோம். (உலகத்தின் எல்லா இன்பங்களையும் துறந்து விடக்கூடிய)துறவித்தனத்தை நாம் அவர்கள் மீது கடமையாக விதிக்கவில்லை. எனினும், அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தை அடையவிரும்பி, அவர்களே அதை உண்டுபண்ணிக்கொண்டார்கள். அவ்வாறிருந்தும், அதை அனுசரிக்க வேண்டிய முறைப்படி அவர்கள் அனுசரிக்கவில்லை. ஆயினும், (நபியே) (அவர்களில் எவர்கள்) (மெய்யாகவே உம்மை நம்பிக்கை கொள்கிறார்களோ அவர்களுடைய கூலியை நாம் அவர்களுக்குக் கொடுப்போம் எனினும், அவர்களில் பெரும்பாலானவர்கள் (நபியே! உம்மை நிராகரிக்கின்ற) பாவிகளாகவே இருக்கின்றனர்.

28. ஆகவே, (ஈஸாவை) நம்பிக்கை கொண்ட (கிறிஸ்த)வர்களே! நீங்கள் அல்லாஹ்வுக்குப் பயந்து அவனுடைய இத்தூதரை (முஹம்மதை)யும், நம்பிக்கைக் கொள்ளுங்கள். உங்களுக்கு அவனுடைய அருளிலிருந்து (ஈஸாவை நம்பிக்கைக் கொண்டதற்கு ஒரு பங்கும், இத்தூதரை நம்பிக்கைக் கொண்டதற்கு ஒரு பங்கும். ஆக) இரண்டு பங்கு கூலி கொடுப்பான். உங்களுக்கு (நேரான வழியை அறிவிக்கக்கூடிய இந்த குர்ஆன் என்னும்) ஒளியையும் கொடுப்பான். அதன் பிரகாசத்தைக் கொண்டு நீங்கள் (நேரான வழியில்) செல்லலாம். (உங்கள்) குற்றங்களையும் உங்களுக்கு மன்னித்து விடுவான்.அல்லாஹ் மிக மன்னிப்பவனும், மகா கருணையுடையவனும் ஆவான்.

29. (இத்தூதரை நம்பிக்கை கொண்டவர்களுக்கு) அல்லாஹ்வுடைய அருளில் ஒரு பாகமும் கிடைக்காதென்று வேதத்தை உடையவர்கள் எண்ணிக் கொள்ளாதிருக்கும் பொருட்டே (இதை அவன் உங்களுக்கு அறிவித்தான்). அருள் அனைத்தும் நிச்சயமாக அல்லாஹ்வின் கையில் தான் இருக்கின்றன.அவன் விரும்பியவர்களுக்கு அதை அளிக்கிறான். அல்லாஹ் மகத்தான அருளுடையவன் ஆவான்.

**(அத் : 57– வசனம் : 27–29)**
**மொழிபெயர்ப்பு : அல்லாமா அப்துல் ஹமீது பாகவி (ரஹ்)**

## அண்ணல் நபி (ஸல்) கன்னல் மொழி

அண்ணல் (ஸல்) நவின்றார்கள்: குத்துச்சண்டையில் அடுத்த வனை வீழ்த்துபவன் வலிமை வாய்ந்தவன் அல்லன்; மாறாக கோபம் வரும்போது தன்னைத்தானே அடக்கிக் கொள்பவனேஉண்மையானவலிமைவாய்ந்தவன் ஆவான். (அதாவது கோபம் வரும்போது இறைவனுக்கும் அவனுடைய தூதருக்கும் விருப்பமில்லாத செயலை தவிர்ப்பவன்)

**அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி), நூல் (புகாரி)**

## சிந்தனைக் களஞ்சியம்

உனக்கு ஏதும் துன்பம் ஏற்பட்டு விட்டால் அல்லாஹ்வை தவிரவேறு எவரும் அகற்ற முடியாது. எனவே, உனது துன்பத்தை அல்லாஹ் அல்லாதவர்களிடம் முறையிடாதே.

**உயர் முஹியித்தின் அண்டகை (ரலி)**

## தொழுகை நேரம்

**மார்ச் 6 முதல் 11 வரை** (சென்னைக்கு மட்டும்)

| | |
|---|---|
| பஜ்ரு - 5 - 20 | மஃரிப் - 06 - 19 |
| ளுஹர் - 12 - 38 | இஷா - 07 - 31 (ஷாபி) |
| அஸர் - 03 -48 (ஷாபி) | இஷா - 07 - 40 (ஹனபி) |
| அஸர் - 04 -37 (ஹனபி) | |

**சூரிய உதயம் : 06 - 34 அஸ்தமனம் : 06-12**

செய்தி அனுப்ப மின்னஞ்சல்: manichudardaily@gmail.com
விளம்பரம் மற்றும் நிர்வாக மின்னஞ்சல் : manichudar.ac@gmail.com

சந்தா, விளம்பர கட்டணங்கள் அனுப்ப வங்கிக் கணக்கு

Account Name :MANICHUDAR
Account No :030502000004571
Bank :INDIAN OVERSEAS BANK
Branch :MUTHIYALPET, CHENNAI-600 001
IFSC CODE :IOBA0000305
SWIFT CODE :IOBAINBB305

என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

# 50 பெண்கள், 42 முஸ்லிம் உள்பட 291 வேட்பாளர்கள் பட்டியலை வெளியிட்டது திரிணமூல் காங்கிரஸ்

## நந்திகிராமில் மம்தா பானர்ஜி போட்டி

கொல்கத்தா,மார்ச்.6-

மேற்கு வங்க சட்டப்பேரவைத் தேர்தலில் நந்திகிராம் தொகுதியில் போட்டியிடுவதாக திரிணமூல் காங்கிரஸ் கட்சியின் தலைவரும், முதல்வருமான மம்தா பானர்ஜி இன்று அறிவித்துள்ளார்.

வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் 291 தொகுதிகளுக்கான வேட்பாளர்கள் பட்டியலை திரிணமூல் காங்கிரஸ்கட்சிவெளியிட்டது அதில் நந்திகிராம் தொகுதி மம்தா பானர்ஜிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

மேற்கு வங்கத்தில் உள்ள 294 தொகுதிகளுக்கும் 8 கட்டங்களாகச் சட்டப் பேரவைத் தேர்தல் நடக்கிறது. இதில் முதல்கட்டத் தேர்தல் வரும் 27-ம்தேதி தொடங்குகிறது. இந்தத் தேர்தலில் மூன்றாவது முறையாக ஆட்சியைத் தக்கவைக்க ஆளும் மம்தா பானர்ஜி தலைமையிலான திரிணமூல் காங்கிரஸ் கட்சி கட்சி கடுமையாகப் போராடி வருகிறது.

திரிணமூல் காங்கிரஸ் கட்சி இந்தமுறை 291 தொகுதிகளிலும், கூட்டணிக் கட்சியான கூர்கா ஜன்முக்தி மோர்ச்சா(ஜிஜேஎம்) கட்சிக்கு 3 இடங்களையும் ஒதுக்கியுள்ளது.



முதல்வர் மம்தா பானர்ஜி தற்போது பவானிபூரில் எம்எல்ஏவாக இருந்து வருகிறார், கடந்த 2 முறையும் அந்தத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மம்தா பானர்ஜி இந்த முறை நந்திகிராம் தொகுதியிலிருந்து போட்டியிட உள்ளார்.

291 தொகுதிகளுக்கும் வேட்பாளர்கள் பட்டியலை அறிவித்து திரிணமூல் காங்கிரஸ் கட்சித் தலைவர் மம்தா பானர்ஜி நிருபர்களுக்கு இன்று பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

நாங்கள்தான் மாநிலத்தில் முதன்முதலாக வேட்பாளர்கள் பட்டியலை அறிவித்துள்ளோம். இந்த முறை 291 தொகுதிகளில் திரிணமூல் காங்கிரஸ் கட்சி போட்டியிடுகிறது. இதில் 50 பெண் வேட்பாளர்கள், பட்டியலினத்தவர்கள் 79 பேர், பழங்குடியினர் 17 பேர், 42 முஸ்லிம் வேட்பாளர்கள் என 291 பேர் போட்டியிடுகின்றனர்.

எங்கள் கூட்டணிக் கட்சியான கோர்கா ஜன்முக்தி மோர்ச்சா கட்சிக்கு 3 இடங்களை ஒதுக்கியுள்ளோம். டார்ஜ்லிங், கிலம்பாங், குர்சியாங் தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. இந்தத் தேர்தலில் எனக்கு ஆதரவு அளித்த சிவசேனா தலைவர் உத்தவ் தாக்கரே, சமாஜ்வாதிக் கட்சித் தலைவர் அகிலேஷ் யாதவ், ஜார்கண்ட் முதல்வர் சிபுசோரன், ராஷ்ட்ரிய ஜனதா தளம் கட்சித் தலைவர் தேஜஸ்வி யாதவ் ஆகியோருக்கு நன்றி தெரிவிக்கிறேன்

நந்திகிராம் தொகுதியில் போட்டியிடுவேன் என்று கூறியிருந்தேன் அதன்படி இந்தமுறை அங்குப் போட்டியிடுகிறேன். பவானிபூரி எனக்கு இளைய சகோதரி தொகுதி போன்றது என்றால்,நந்திகிராம் மூத்த சகோதரி போன்றது. இந்த முறை பவானிபூரில் சோபன்தீப் சாத்தோபத்யாயே போட்டியிட உள்ளார். புதிய வேட்பாளர்களுக்கு வாய்ப்பு அளிக்க வேண்டும் என்பதால், பலருக்கும் வாய்ப்பு வழங்கப்படவில்லை" இவ்வாறு மம்தா பானர்ஜி தெரிவித்தார்.




5.3.2021 திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மீசா நல்லூர் இருளர் குடியிருப்பு வாக்காளர்களிடம் 100% வாக்களிப்பதன் அவசியம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் சந்தீப் நந்தூரி தலைமையில் நடைபெற்றது. இதில் ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் கே. ஆர்த்தி , மகளிர் திட்ட இயக்குனர் சந்திரா, பயிற்சி உதவி கலெக்டர் அஜிதா பேகம், வந்தவாசி தாசில்தார் திருநாவுக்கரசு, மற்றும் அரசு அதிகாரிகள், மகளிர் குழு உறுப்பினர்கள், பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர்.

## ஆன்லைன் மூலம் 18 சேவைகள் அறிமுகம்

# ஓட்டுநர் உரிமம் பெற இனி ஆர்டிஓ அலுவலகம் போகத் தேவையில்லை

புதுடெல்லி,மார்ச்.6-

ஓட்டுநர் பழகுநர் உரிமம், ஓட்டுநர் உரிமம், ஆர்சி புத்தகம் பெறுதல் உள்ளிட்ட எதற்கும் இனிமேல் மண்டல போக்குவரத்து அலுவலகத்துக்குச் செல்லத் தேவையில்லை. ஆதார் அடிப்படையில் 18 விதமான சேவைகளை ஆன்-லைனில் பெறும் வசதியை மத்திய சாலைப்போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை கொண்டுவந்துள்ளது.




இது தொடர்பாக மத்திய சாலைப்போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சகம் நேற்று வெளியிட்ட அறிவிக்கை வெளியிட்டுள்ளது. அதில் கூறப்பட்டு இருப்பதாவது:

"குடிமக்களுக்கு வசதியான, இடையூறு இல்லாத சேவைகளை வழங்கும் பொருட்டு, ஆதார் அடிப்படையில் பல்வேறு சேவைகளைப் பெறும் வசதியைப் பெறுவதற்காக ஊடகங்கள், அறிவிக்கைகள் மூலம் தேவையான விரிவான ஏற்பாடுகளை மத்திய சாலைப்போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சகம் செய்யும்" எனத் தெரிவித்துள்ளது.

ஓட்டுநர் உரிமம் மற்றும் ஆர்சிபுத்தகம் ஆகியவற்றோடு ஆதார் எண்ணை இணைப்பது குறித்து வரைவு அறிவிக்கையை ஏற்கெனவே வெளியிட்டிருந்தது.அதன்பின் இந்த சேவைகள் அறிமுகம் செய்யப்படுகின்றன.

இதன்படி, வாகன உரிமம், வாகனம் தொடர்பான 18 வகையான சேவைகளுக்கு வாகன ஓட்டிகள் மண்டல போக்குவரத்து நேரடியாகச் செல்ல வேண்டியதில்லை. ஆதார் மூலம் ஓட்டுநர் உரிமம், ஆர்சி புக்கை இணைத்திருந்தால் இந்த சேவைகளை ஆன்லைன் மூலம் வீட்டிலிருந்தவாறே பெற முடியும்.

ஓட்டுநர் உரிமம், ஆர்சி புக்கில் ஆதார் எண்ணை இணைத்திருந்தால், ஆன்-லைன் மூலம் பழகுநர் உரிமம், ஓட்டுநர் உரிமம் புதுப்பிப்பு, டூப்பிளிகேட் ஓட்டுநர் உரிமம், ஓட்டுநர் உரிமத்தில் முகவரி மாற்றுதல் உள்ளிட்டவற்றை ஆன்லைன் மூலம் பெறலாம்.

ஆன்-லைன் மூலம் பெறக்கூடிய 18 வகையான சேவைகள் விவரம்

1. பழகுநர் உரிமம் (எல்எல்ஆர்)

2. ஓட்டுநர் உரிமம் புதுப்பிப்பு (வாகனத்தை இயக்கிக் காட்டுதல் தேவை யில்லை என்றால்)

3. டூப்ளிகேட் டிரைவிங் லைசன்ஸ்

4. ஓட்டுநர் உரிமம், ஆர்சிபுக்கில் முகவரி மாற்றுதல்

5. சர்வதேச அளவில் ஓட்டுநர் உரிமத்துக்கு அனுமதி

6. வாகன உரிமத்தை ஒப்படைத்தல்

7. வாகனத்துக்குத் தற்காலிகமாகப் பதிவெண் பெற விண்ணப்பித்தல்

8. முழுமையாகக் கட்டமைக் கப்பட்ட வாகனத்துக்கு பதிவெண் பெற விண்ணப்பித்தல்

9. வாகனத்துக்கு டூப்ளிகேட் பதிவெண் பெற விண்ணப்பித்தல்

10. என்ஓசி சான்றிதழ் பெற விண்ணப்பித்தல்

11. வாகனத்தின் உரிமையாளரை மாற்றுவதற்கு விண்ணப்பித்தல்

12.வாகன ஆர்சி புத்தகத்தில் முகவரியை மாற்றுவது குறித்து விண்ணப்பித்தல்

13. அங்கீகரிக்கப்பட்ட ஓட்டுநர் பயிற்சிப்பள்ளியில் பயிற்சி பெற விண்ணப்பம் பதிவு செய்தல்

14. உயர் அதிகாரிகளுக்கு வாகனத்தைப் பயன்படுத்தப் பதிவு செய்ய விண்ணப்பித்தல்

15.வாகனத்தை வாடகைக்கு எடுப்பது தொடர்பான ஒப்பந்தத்தைப் பதிவு செய்தல்

16.வாகனத்தை வாடகைக்கு எடுத்த காலம் முடிந்தபின் ஒப்பந்தத்தை ரத்து செய்தல்

17. வாகனத்தின் உரிமத்தை மாற்றுவது குறித்து விண்ணப்பித்தல்

18. தூதரக அதிகாரிகள் பயன்படுத்தும் வாகனங்களுக்கு புதிய வாகன பதிவெண் பெற விண்ணப்பித்தல்

இந்த சேவைகளை ஆன்-லைன் மூலம் பெறலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அறிவு சார்ந்த சமுதாயத்தை ஏற்படுத்த முயற்சி

# அமீரக வாசிப்பு மாதத்தையொட்டி சார்ஜாவில் நூலகங்களில் பொதுமக்கள் கட்டணமின்றி உறுப்பினர் ஆகலாம்

### அதிகாரி தகவல்

சார்ஜா,மார்ச்.6-

அமீரக வாசிப்பு மாதத்தையொட்டி சார்ஜாவில் உள்ள பொது நூலகங்களில் பொது மக்கள் கட்டணமின்றி அடிப்படை உறுப்பினர் ஆகலாம் என பொது நூலக இயக்குனர் தெரிவித்தார்.

இதுகுறித்துசார்ஜா பொது நூலக இயக்குனர் இமான் புசுலைபி கூறியதாவது:- அமீரகத்தில் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதம் அமீரக வாசிப்பு மாதமாக அனுசரிக்கப்பட்டு வருகிறது. இந்த மாதத்தில் ஒவ்வொரு நபரும் புத்தகங்களை வாசிக்க வேண்டும் என்பதற்காக சிறப்பு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

இந்த நிகழ்ச்சிகள் கொரோனா பரவலை கருத்தில் கொண்டு காணொலி வழியாக நடத்தப்படுகிறது.

குறிப்பாக இந்த மாதத்தில் கட்டணமின்றி நூலக உறுப்பினராவது மற்றும் வாசிப்பவருடன், வாசிப்பவர் என புதிதாக 2 முயற்சிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அதில், நூலக உறுப்பினராவது என்பது, சார்ஜா பகுதியில் உள்ள நூலகங்களில் பொதுமக்கள் அனைவரும் கட்டணம் ஏதும் இன்றி இலவசமாக தங்களை உறுப்பினராக பதிவு செய்து கொள்ளலாம்.

இந்த சலுகையானது ஒரு வருடத்துக்கு இருக்கும்.அடுத்த ஆண்டு (2022) ஏப்ரல் மாதம் முதல், உறுப்பினருக்கான கட்டணத்தை செலுத்த வேண்டும்.

இந்த முயற்சியானது 'ஒவ்வொருவரின் நூலகம்' என்ற அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது இந்த திட்டத்தின் கீழ் சார்ஜா பகுதியில் உள்ள கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள், பள்ளிக்கூடங்கள் உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்களைச் சேர்ந்த மாணவ, மாணவி யியரும், பொது மக்களும் பொது மக்களும் உறுப்பினர்களாக சேர்ந்து பயன்பெற கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும் அரசுத்துறை ஊழியர்களும்,

தனியார் துறை ஊழியர்களும் இந்த திட்டத்தின் கீழ் உறுப்பினர்களாக சேருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளனர்.

இந்த உறுப்பினர்கள் நேரடியாகவும், ஆன்லைன் மூலமாகவும் சார்ஜாவில் உள்ள பொது நூலகங்களில் தங்களுக்கு விருப்பமான நூல்களை எடுத்து படிக்க முடியும்.

2-வது முயற்சியாக 'வாசிப்பவருடன், வாசிப்பவர்' என்ற திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின் கீழ் ஒருவர் தான் வாசித்த நூலை சார்ஜா பொது நூலக ஊழியரின் ஒத்துழைப்புடன் மற்றொரு வாசகருக்கு வழங்கலாம். இதன் மூலம் பொதுமக்கள் தங்களிடம் உள்ள நூல்களை மற்றவர்கள் படிக்கும் வகையில் கொடுத்து உதவும் வாய்ப்பு ஏற்படும்.

இந்த வாசிப்பு மாதம் தொடர்பாக சமூக வலைத்தளங்கள் உள்ளிட்ட பல்வேறு இணையதளம் வாயிலாகவும் கருத்துகள் பதிவு செய்யப்பட்டு வருகிறது.

அறிவுசார்ந்தசமுதாயத்தை ஏற்படுத்தும் முயற்சியாக இத்தகைய பணிகள் நடக்கிறது.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## எட்டுத்திக்கும் வாழ்வில் நாம் சூரியனைக் காண...

**காப்போம்! சமத்துவம் காப்போம்!**
**கோர்ப்போம்! கரணங்களைக் காண்போம்!**

அன்புள்ளம் கொண்டோரே! தமிழகம் விடியப்போகுதுங்க!
இருண்ட காலந்தான் நம்மை விட்டுப் போகப்போகுதுங்க!
பண்புள்ளம் கொண்டோரே! நல்லாட்சி வரப்போகுதுங்க!
நல்வாழ்வு நமக்கெல்லாம் அது தரப்போகுதுங்க!
சூரியனும் ஆள சந்திரனும் வாழ
சமய நல்லிணக்கம் காண வா.........ஆ..........ஆ...........
நம் ஸ்டாலின் தலைமை ஆட்சி தமிழகத்தில் காண
எம் காதர் மொகிதீன் கரத்தைப் பற்றி வா! ஆ...ஆ... (அன்புள்ளம்)

ஓ............ஓ...............ஓ...............ஓ.............
பெட்ரோல் டீசல் விலையினிலே அன்றாடம் விஷத்தைப்போல
நாட்டு மக்கள் தலையினிலே ஆளும் வர்க்கம் ஏத்திடிச்சி!
ஷேம் ஷேம் மிக மிக ஷேம் ஷேம்!
சமையல் எரிவாயு சிலிண்டர் மானியத்தை
மக்களுக்கு வழங்காமல் கொள்ளையிலே போயிடிச்சி!
ஷேம் ஷேம் மிக மிக ஷேம் ஷேம்!
பொது முடக்க இடியால் தொழிலும் நொடிஞ்சாச்சு!
பணமதிப்பு இழப்பால் பொழப்பையும் இழந்தாச்சி!
வரிவிதிப்பு முறையால் வாழ்வை தொலைச்சாச்சு!
வளங்கலெல்லாம் தனியார் துறைக்கு வார்த்தாச்சு!
ஆட்சியாளர் பைய நிறப்பும் ஆட்சி நீங்க
மக்களுக்கான நல்ல மக்களாட்சி துலங்க
உழைப்போம் அயரா உழைப்போம்!
உழைப்போம் உயிராய் உழைப்போம்! (அன்புள்ளம்)

ஆ..... .....ஆ.... .......ஆ..... ...ஆ........
வாழ்வாதாரக் குடியுரிமை விவசாய சட்டங்களால்
வாழும் நம் வாழ்கையையெல்லாம் குடிமுழுகிப்போயிடிச்சி!
ஷேம் ஷேம்! மிக மிக ஷேம் ஷேம்!
விளையும் வளங்கெல்லாம் வியாபார நோக்கோடு
விலையை ஏற்றி ஏழை வயிற்றில் தீயை வச்சிடிச்சி!
ஷேம் ஷேம்! மிக மிக ஷேம் ஷேம்!
ரெண்டு கோடி வேலை தர்ரதா மொழிஞ்சாங்க!
ரெண்ட்ர கோடி பேர்கள் வேலையை இழந்தாங்க!
மேற்படிப்பு படிக்க மாணவர் முயன்றாங்க!
நீட் தேர்வு போட்டு முட்டுக் கொடுத்தாங்க!
குட்டக் குட்டக் குனிய அடிவருடிகளா நாம
எட்டுத் திக்கும் வாழ்வில் நாம் சூரியனைக் காண!
உழைப்போம் அயரா உழைப்போம்!
உழைப்போம் உயிராய் உழைப்போம்! (அன்புள்ளம்)

இ. யூ. முஸ்லிம் லீக் சட்டமன்ற தேர்தல் பணிக்குழுவினர் மாநாட்டில் கவிஞர் எ.ஷேக்மதார் ஆமிரி அறங்கேற்றம் செய்த சிறப்பு பாடல்

**மணிச்சுடர்**
நாளிதழில் விளம்பரம் செய்து பயனடையுங்கள்

# திமுக கூட்டணியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு 6 இடங்கள் ஒதுக்கீடு

## தொகுதி பங்கீட்டில் உடன்பாடு

சென்னை,மார்ச்.6-

திமுக கூட்டணியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு 6 தொகுதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழக சட்டமன்ற தேர்தலையொட்டி திமுக. கூட்டணி கட்சிகள் இடையே பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது.

விடுதலை சிறுத்தைகள் கட்சி யுடன் முதல்கட்ட தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தை சென்னை அண்ணா அறிவாலயத்தில் கடந்த 1-ந்தேதி நடைபெற்றது. தொடர்ந்து நடைபெற்று வந்த பேச்சுவார்த்தையில் தி.மு.க. கூட்டணியில் விடுதலை சிறுத்தைகள் கட்சி உடன்பாடு செய்து கொண்டது. அந்த கட்சிக்கு 6 தொகுதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டது. தங்கள் கட்சி தனி சின்னத்தில் போட்டியிடும் என திருமாவளவன் அறிவித்தார்.

இதனையடுத்து தமிழக சட்டமன்ற தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் அங்கம் வகிக்கும் இந்திய கம்யூனிஸ்டு கட்சியுடன் முதல்கட்ட தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தை சென்னை அண்ணா அறிவாலயத்தில் கடந்த 2-ந்தேதி நடைபெற்றது.

இந்திய கம்யூனிஸ்டு கட்சி மாநில செயலாளர் ஆர்.முத்தரசன் தலைமையிலான குழுவினர் 10 தொகுதிகளுக்கு மேல் கேட்டு பேச்சுவார்த்தையை ஆரம்பித்து வைத்தனர்.

ஆனால் தி.மு.க. தரப்பில் இரட்டை எண்ணிக்கையில் தொகுதிகள் வழங்க முடியாது.

ஒற்றை இலக்கத்தில் தான் வழங்க முடியும் என்று பேச்சுவார்த்தையை முடித்து வைத்தனர். அதாவது இந்திய கம்யூனிஸ்டு கட்சிக்கு அதிகபட்சம் 6 தொகுதிகள் வரை வழங்க தி.மு.க. தயாராக இருப்பதாக கூறப்பட்டது.

இந்தநிலையில் சட்டமன்ற தேர்தல் தொகுதி பங்கீடு குறித்த 3-ம் கட்ட பேச்சுவார்த்தைக்கு பின் திமுக கூட்டணியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு 6 தொகுதிகள் ஒதுக்கீடு உடன்பாடு கையெழுத்தானது.

அண்ணா அறிவாலயத்தில் முகஸ்டாலின் - முத்தரசன் முன்னிலையில் தொகுதிப்பங்கீடு ஒப்பந்தம் கையெழுத்தானது.

சட்டமன்ற தேர்தலில் திமுக கூட்டணியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு 6 தொகுதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

திருத்துறைப்பூண்டி, பவானிசாகர், தளி, சிவகங்கை, அறந்தாங்கி, புதுக் கோட்டை, ஆலங்குடி, ஸ்ரீவில்லிபுத்தூர் உள்ளிட்ட தொகுதிகளில் போட்டியிட 11 தொகுதிகளைக்கொண்ட விருப்பபட்டியலை திமுக விடம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கொடுத்து இருக்கிறது.

திமுக கூட்டணியில் விசிக கட்சிக்கு 6 தொகுதி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி 6 தொகுதி, இந்திய யுனியன் முஸ்லிம் லீக் 3 தொகுதி, மமக 2 தொகுதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# தமிழகத்தில் கொரோனாவால் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 12,513 ஆக அதிகரிப்பு

சென்னை,மார்ச்.6-

தமிழகத்தில் இதுவரை கொரோனாவால் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 12,513 ஆக அதிகரித்துள்ளது.,தமிழகத்தில் கடந்த சில நாட்களாக கொரோனா தொற்றால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை படிப்படியாக குறைந்து வருகிறது.

இந்த நிலையில் தமிழக சுகாதாரத்துறை அமைச்சகம் வெளியிட்ட தகவலின்படி, தமிழகத்தில் நேற்று புதிதாக 543 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் தமிழகத்தில் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 8,53,992 ஆக அதிகரித்துள்ளது.

தமிழகத்தில் நேற்று 5 பேர் கொரோனா பாதிப்பால் உயிரிழந்துள்ளனர். இதன் மூலம் தமிழகத்தில் இதுவரை கொரோனாவால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 12,513 ஆக அதிகரித்துள்ளது.

தமிழகத்தில் நேற்று மேலும் 562 பேர் கொரோனா சிகிச்சை முடிந்து டிஸ்சார்ஜ் செய்யப்பட்டுள்ளனர். இதனால் தமிழகத்தில் கொரோனாபாதிப்பிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 8,37,525 ஆக உயர்ந்துள்ளது.

தமிழகத்தில் தற்போது 3,954 பேர் கொரோனாவிற்கு சிகிச்சை பெற்று வருவ தாக சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது. சென்னையில் நேற்று மேலும் 225 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனால் சென்னையின் கொரோனா பாதிப்பு மொத்த எண்ணிக்கை 2,36,485 ஆக உயர்ந்துள்ளது.

### தேர்வுக்கு மாணவர்களை தயார் படுத்தும் நிலையில்

# தேர்தல் பணிகளில் இருந்து ப்ளஸ்-1, ப்ளஸ்-2 ஆசிரியர்களுக்கு விலக்கு வழங்கப்படுமா?

மதுரைமார்ச்6-

மாணவர்களை தேர்வுக்கு தயார்படுத்த வேண்டிய நிலையில் உள்ளதால், தேர்தல் பணிகளில் இருந்து ப்ளஸ்-1, ப்ளஸ்-2 ஆசிரியர்களுக்கு விலக்கு வழங்கப்படுமா? என்ற எதிர்பார்ப்பு அவர்கள் மத்தியில் எழுந்துள்ளது.

கொரோனா ஊரடங்கால் கடந்த ஆண்டு முழுவதும் பள்ளிகள் திறக்கப்படவில்லை.

அதனால், 9, 10 மற்றும் ப்ளஸ்-1 வகுப்புகளுக் கான இறு தியாண்டு தேர்வுகள் ரத்து செய்யப்பட்டுள்ளது.

ஆனால், ப்ளஸ்-டூ தேர்வு மட்டும் மே 3ம் தேதி தொடங்க உள்ளது.

கொரோனா ஊரடங்கு நேரத்தில் தனியார் பள்ளிகளில் மட்டுமே ப்ளஸ்-டூ மாணவர்களுக்கு ஆன்லைன் வகுப்பு மூலம் முறையாக வகுப்புகள் நடந்துள்ளன.

அவர்களுக்கான பாடங் களும் நடத்தப்பட்டு திருப்புதல் தேர்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

ஆனால், அரசுப் பள்ளிகள், அரசு உதவிபெறும் பள்ளிகளில் ப்ளஸ் - 2 வகுப்பு மாணவர்களுக்கு இன்னும் பாடங்கள் நடத்தி முடிக்கப்படவில்லை.

இப்பள்ளிகளில் படிக்கும் மாணவர்களில் பெரும் பாலான மாணவர்கள் மிகவும் ஏழ்மை நிலையில் இருப்ப வர்கள். அவர்களில் பலருக்கு தந்தை, தாய் இல்லாமல் உறவி னர்கள் அர வணைப்பில் படிக்கின்றனர். கொரோனா ஊரடங்கு காலத்தில் இவர்கள் கட்டிட வேலை உள்ளிட்ட தினக்கூலி வேலைகளுக்கு சென்றுவிட்டனர்.

இந்த ஆண்டு பள்ளிகள் திறந்தபிறகுதான் ப்ளஸ்-2 பாடங்களை படிக்க ஆரம் பித்துள்ளனர். பாடங்களையும் தற்போதுதான் ஆசிரியர்கள் விரைவாக நடத்தி வருகின் றனர்.

கடந்த காலங்களில் மாதத்தேர்வுகள், காலாண்டு, அரையாண்டு தேர்வுகளை எழுதி முறையாக படித்த போதே அரசு மற்றும் அரசு உதவிப்பெறும் பள்ளி மாணவர்கள் தேர்வு காலங் களில் மிகவும் சிரமப்பட்டனர்.

தற்போது எந்தத் தேர்வுகளையும் எழுதாமல் முறையாக பாடமும் நடத்தப்படாமல் முறையான தயாரிப்பு இல்லாமல் எப்படி ப்ளஸ்-டூ தேர்வுகளை எழுதப்போகிறார்கள் என்ற கவலையில் ஆசிரியர்கள் உள்ளனர்.

இதுகுறித்து அவர்கள் கூறியதாவது: தமிழகத்திற்கு சட்டப்பேரவைத் தேர்தல் ஏப்ரல் 6ம் தேதி நடப்பதாகவும், வாக்கு எண்ணிக்கை மே 2ம் தேதி நடப்பதாகவும் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

அதனால், தேர்தலுக்கான ஆயத்தப் பணிகளை தேர்தல் ஆணையம் தொடங்கிவிட்டது. இன்னும் ஒரு சில நாட்களில் தேர்தல் பணிகளில் ஈடுபடும் அரசு ஊழியர்களுக்கான பயிற்சி வகுப்புகளுக்கான தேர்தல் அறிவிக்கப்பட உள்ளது.

தேர்தல் பணிகளில் பள்ளி ஆசிரியர்கள் வழக்கம்போல் ஈடுபடுத்தப்பட உள்ளது.

ஆனால், ப்ளஸ்-1, ப்ளஸ்- வகுப்பு ஆசிரியர்கள், தற்போதுதான் ப்ளஸ்-2 வகுப்பு மாணவர்களுக்கு முழுவீச் சில் பாடம் எடுத்து வருகிறோம்.

எங்களையும் தற்போது தேர்தல் ஆணையத்தின் பயிற்சிக்கு அழைக்க பட்டியல் எடுத்துள்ளனர்.

ஏற்கெனவே, ப்ளஸ்-டூ மாணவர்களுக்கு தடையின்றி பாடம் நடத்தவும், கொரோனா ஊரடங்கு விடுமுறையை ஈடுகட்டவும் சனிக்கிழமையும் பள்ளிகள் நடக்கிறது.

தற்போது தேர்தல் பயிற்சி வகுப்புகள் ஞாயிற்றுக்கிழமை நடந்தால் ஆசிரியர்கள் ஓய்வே இல்லாமல் தேர்வுகள் முடியும் வரை பணிபுரிய வேண்டிய இருக்கும்.

அதனால், அவர்கள் ப்ளஸ்-2 தேர்வுக்கு மாணவர்களை தயார்ப்படுத்தும் பணியில் கவனம் சிதறவும், தோய்வும் ஏற்பட வாய்ப்புள்ளது. மேலும், வாக்கு எண்ணிக்கை நடக்கும் மே 2ம் தேதிக்கு மறுநாள் 3ம் தேதி ப்ளஸ்-2 தேர்வு நடக்க உள்ளது.

வாக்கு எண்ணிக்கை சில தொகுதிகளில் நள்ளிரவு வரை நடக்கும். சில சமயம் மறுநாள் காலை வரை கூட நடக்கும். அதுவரை வாக்கு எண்ணிக்க மையப்பணிகளுக்கு செல்லும் ப்ளஸ்-1, ப்ளஸ்-2 ஆசிரியர்கள் அங்கு இருந்தாக வேண்டும். அதனால், தேர்தல் பணிகளில் ப்ளஸ்-1, ப்ளஸ்-2 வகுப்பு ஆசிரியர்களுக்கு விதி விலக்கு அளிக்க வேண்டும், '' என்றனர்.

### அ.தி.மு.க. வேட்பாளர் பட்டியல் வெளியீடு

# எடப்பாடி தொகுதியில் முதல்-அமைச்சர் பழனிசாமி மீண்டும் போட்டி



சென்னை,மார்ச்6-

சென்னை ராயப்பேட்டை யில் உள்ள அதி.மு.க. அலுவ லகத்தில் நேற்று அக்கட்சியின் மாவட்ட செயலாளர்கள் கூட்டம் நடந்தது. முதல்கட்ட வேட்பாளர் பட்டியல் வெளி யானது. அதன்படி, சேலம் மாவட்டம் எடப்பாடி தொகுதியில் அதி.மு.க. இணை ஒருங்கிணைப்பாளரும், முதல்-அமைச்சருமான எடப்பாடி பழனிசாமி போட்டியிடுகிறார். தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் தொகுதியில் ஒருங் கிணைப்பாளரும், துணை முதல்-அமைச்சருமான ஓபன்னீர்செல்வம் போட்டி யிடுகிறார். ராயபுரம் தொகுதியில் மீன்வளத்துறை அமைச்சர் டிஜெயக்குமாரும், விழுப்புரம் தொகுதியில் சட்டத்துறை அமைச்சர் சி.வி.சண்முகம் போட்டி யிடுவார் என்றும், ஸ்ரீவைகுண் டம் தொகுதியில் முன்னாள் அமைச்சரும், மாவட்ட செயலாளருமான எஸ்பி.சண் முகநாதன் எம்.எல்.ஏ. போட்டியிடுவார் என்றும், நிலக்கோட்டை (தனி) தொகு தியில் எஸ்.தேன் மொழி எம்.எல்.ஏ. போட்டி யிடுவார் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.


**மணிச்சுடர்**

**நாளிதழ் சந்தா விவரம்**

**ஆண்டுச் சந்தா : ரூ. 1400/–**

**ஆறு மாதச் சந்தா ரூ. 700/–**

**மூன்று மாதச் சந்தா ரூ. 350/–**


# தொகுதிகளின் எண்ணிக்கையை விட லட்சியமே முக்கியம்

### தொகுதி பங்கீட்டுக்கு பின் முத்தரசன் பேட்டி



சென்னைமார்ச்6-

தொகுதிகளின் எண்ணிக் கையை விட லட்சியமே முக்கியமானது என திமுக உடனானதொகுதிபங்கீட்டுக்கு பின் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயலாளர் முத்தரசன் கூறினார்.

திமுக - இந்திய கம்யூனிஸ்ட் இடையே தொகுதி பங்கீட்டில் உடன்பாடு ஏற்பட்டு இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு 6 தொகுதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தொகுதி பங்கீடு ஒப்பந் தத்தில் கையெழுத்தானது.

திமுக - இந்திய கம்யூனிஸ்ட் இடையே கூட்டணி இழுபறி ஏற்பட்டு வந்த நிலையில், சென்னை அண்ணா அறிவாலயத்தில் இன்று நடைபெற்ற 3ஆம் கட்டப் பேச்சுவார்த் தையில் 6 தொகுதிகள் ஒதுக்கப்பட்டு ஒப்பந்தம் கையெழுத்தாகி யுள்ளது.

அதனைத் தொடர்ந்து செய்தியாளர் களை சந்தித்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் முத்தரசன், "ளூரடிவ;திமுக உடனான தொகுதி பங்கீடு சுமூகமாக முடிவடைந்துள்ளது. தொகு தியா லட்சியமா என்றால் லட்சியத்திற்கு தான் முதலிடம் கொடுக்கப்படும் என்றார்.

மேலும், இந்திய கம்யூனிஸ்ட் போட்டியிட விரும்பும் தொகுதிகள் குறித்த பட்டியல் திமுகவிடம் அளிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.




அடியார்கள் மீது அன்பு மிக கொண்டவன். அவன் மிகப்பெரும் அருளாளன். தமது அடியார்கள் மோட்சம் பெற வேண்டும் என்பதில் மிக மிக அக்கறை கொண்டவன். அடியார்களின் துஆக்களை (வேண்டுதல்களை) மகிழ்வோடு ஏற்பவன். மனிதர்களிடம் கேட்டால் சங்கடப்படுவர். கேட்காதிருந்தால் சந்தோஷமடைவர். அல்லாஹ்வோ தன்னிடம் யாரும் கேட்டால் (துஆ செய்தால்) மகிழ்வு கொள்பவன் - கேட்காது இருந்தால் (து ஆசெய்யாதிருந்தால்) வெறுப்பு கொள்பவன்.

அல்லாஹ்விடம் துஆச் செய்து பிரார்த்தனை புரிந்து - நம் தேவைகளை பெறவேண்டும் என்றே கூறுவார்கள்.

இதோ! சில நபிமொழிகளை காண்போம்.
அல்லாஹ்வின் அடியார்களே! அல்லாஹ்விடம் துஆ செய்வதை பற்றிப்பிடித்துக் கொள்ளுங்கள் **(திர்மிதி)**

துஆ செய்வதை விட கண்ணியமானதொன்று அல்லாஹ்விடம் வேறு எதுவும் இல்லை. **(திர்மிதி)**

உங்களின் இரட்சகன் (அல்லாஹ்) மிகவும் சங்கையானவன். மிகவும் வெட்கப்படுபவன். அடியான் இரு கைகளையும் உயர்த்தி துஆ செய்தபின் அக் கைகளில் எதுவும் வைக்காமல் வெறுமனே தட்டி விடுவதை அல்லாஹ் வெட்கப்படுகிறான். **(அபூதாவூது)**

அல்லாஹ்விடம் யார் துஆ செய்யவில்லையோ அவர்கள் மீது அல்லாஹ் கோபமடைகிறான். **(திர்மிதி)**

அல்லாஹ் விடம் து ஆ செய்யுங்கள். நமது துஆ ஏற்றுக் கொள்ளப்படும் என்ற உறுதியான நம்பிக்கையுடன் துஆ செய்யுங்கள். அவநம்பிக்கையும் - அசட்டையும் கொண்டவனின் துஆவை அல்லாஹ் ஏற்பதில்லை. **(திர்மிதி)**

கஷ்ட காலங்களில் செய்யப்படும் உங்கள் துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்று நீங்கள் விரும்பினால், வளமான காலத்திலும் அதிகம் து ஆசெய்து வாருங்கள். **(திர்மிதி)**

ஒரு மனிதன் அல்லாஹ்விடம் கையேந்தி, 'யாரப்பி. யாரப்பி (என் இரட்சகனே) என்றழைத்து துஆ செய்கிறான். ஆனால் - அவனுடைய உணவு ஹராமானது. அவனது குடிப்பு ஹராமானது. அவனது உடை ஹராமானது. பின் அவளது துஆ எவ்வாறு ஏற்றுக் கொள்ளப்படும்? **(முஸ்லிம்)**

கத்ரு என்னும் இறைவிதியை மாற்றவல்லது துஆவே **(நபிமொழி)**

துஆ முஃமினின் (இறைவிசுவாசிகள்) ஆயுதமாகும். **(நபிமொழி)**

**துஆ செய்யும்போது கடைபிடிக்க வேண்டிய ஒழுக்க முறைகள்**

துஆ செய்பவர் முதலில் தனது உணவு, நீர், உடை ஆகியவை ஹராமானதாக இல்லாதிருக்க கவனம் கொள்ள வேண்டும்.

துஆ செய்பவர் கிப்லாவை முன்னோக்கி மண்டியிட்டு அமர வேண்டும். தலையை உயர்த்தவோ - வேறுபக்கம் திருப்பவோ கூடாது. இரு கைகளையும் நெஞ்சிற்கு நேராக அல்லது முகத்திற்கு நேராக வைக்க வேண்டும். பார்வையை தாழ்த்தி வைக்க வேண்டும். துஆவின் துவக்கத்திலும் - முடிவிலும் ஹம்தும் (இறைபுகழ் சலவாத்தும் கூறவேண்டும்.

ஒரு குறிப்பிட்ட முக்கிய தேவைக்கு துஆ செய்யும்போது முன்னரே தர்மம் செய்தல், தொழுதல், குர்ஆன் ஓதல் போன்ற நல்ல அமல்கள் செய்ய வேண்டும்.

துஆ எந்த மொழியிலும் செய்யலாம். ஆயினும் நாயகம் (ஸல்) அவர்களால் கூறப்பட்ட வாக்கியங்களை கூறி பொருளுணர்ந்து ஓதல் சிறப்பாகும்.

வறுமை - நோய் - தொழில் முடக்கம் அமைதியின்மை என பல்வேறு நிலகளிலும் ஓத வேண்டிய துஆக்களை நாயகம் (ஸல்) அவர்கள் கற்பித்து தந்துள்ளார்கள். அதனை அறிந்து பொருளுணர்ந்து ஓதல் சிறப்பாகும்.

ஹராமான காரியங்களுக்கு துஆ செய்தல் கூடாது - பாவமாகும்.

ஒரே காரியத்திற்காக பல முறை துஆ செய்தாலும், ஒரே வாக்கியத்தை திரும்பத் திரும் பல முறை கூறுவதும் ஆகுமானதே!

**எல்லா துஆக்களும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன....! எப்படி?**

அல்லாஹ் துஆவை ஏற்றுக்கொள்வதென்பது பலவாறாக நிகழும். 1 அடியான் கேட்டதை உடன் தருகிறான். அல்லது சற்று தாமதமாக தருகிறான். 2. அடியான் கேட்டது அவனுக்கு உசிதமானதாக இல்லாவிடில் அல்லாஹ் அதற்கு பகரமாக வேறு ஒன்றைத் தருகிறான். 3. அதன் பகரமாக அவனுக்கு வர இருக்கும் சிரமத்தை அல்லாஹ் தடுத்துவிடுகிறான். 4. இதில் ஏதும் நிகழாவிட்டால் மறுமைநாளில், அடியானின் துஆவிற்குப் பகரமாக பெரும் நன்மைகளை அல்லாஹ் தருகிறான்.

மறுமை நாளில் ஒரு அடியானுக்கு ஏராளமான நன்மைகள் வழங்கப்படும். இவ்வளவு பெரும் நன்மைகள் பெற நான் ஏதும் - சிறப்பு அமல்கள் செய்யவில்லையே என்று அடியான் வியந்து கேட்பான். உலகில் நீர் செய்த சில துஆக்கள் நீர் வேண்டியபடி தரப்படவில்லை. அதற்கு பகரமாக இங்கு உமக்கு இந்த நன்மைகள் கிடைக்கின்றன எனக் கூறப்படும். அடடா - அப்படியென்றால் உலகில் நான் செய்த எந்த துஆவும் ஏற்றுக் கொள்ளப்படாமல் போயிருந்தால் இன்று எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்" என அடியான் கூறுவான்.

**(அஹ்மது, கன்ஜுல் உம்மால்)**

அல்லாஹ்விடம் கேட்கப்படும் எந்த துஆவும் வீணாவதில்லை - பலனற்றுப் போவதில்லை.

ஆகவே - அல்லாஹ்விடம் கேளுங்கள் தயங்காமல் கேளுங்கள்! தாராளமாக கேளுங்கள்! ஏராளமாக கேளுங்கள்! ஏனெனில் -

**அவன் இல்லையென்று சொல்லுவதில்லை!**

**நன்றி: எம்.எஸ்.உமர் ஃபாரூக் தாவூதியின் களஞ்சியம்**

### கொரோனா பரவலை தடுக்கவே

# ரயில் நிலையங்களில் பிளாட்பாரம் டிக்கெட் விலை உயர்வு

### ரயில்வே விளக்கம்

புதுடெல்லி,மார்ச்6-

கொரோனா பரவலை தடுப்பதற்காகவே தற்காலிமாக சில ரயில் நிலையங்களில் நடைமேடை அனுமதி சீட்டின் விலை உயர்த்தப்பட்டுள்ளதாக ரயில்வே விளக்கம் அளித்துள் ளது.

இதுகுறித்து ரயில்வே அமைச்சகம் தெரிவித்துள் ளதாவது:

பிளாட்ஃபார்ம் டிக் கெட் எனப்படும் நடை மேடை அனுமதி சீட்டின் விலை குறித்து சில ஊடகங் களில் செய்திகள் வெளியாகி யிருக்கின்றன. கரோனா பரவலை தடுக்கும் வகையில், அதிக மக்கள் கூட்டம் கூடும் சில ரயில் நிலையங்களில் மட்டுமே தற்காலிமாக நடைமேடை அனுமதி சீட்டின் விலை உயர்த்தப்பட்டுள்ளது.

கூட்டத்தைக் கட்டுப் படுத்துவதற்காக எடுக்கப்பட்ட குறுகிய கால நடவடிக்கையான இது பல்லாண்டு காலமாக கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

சில மாநிலங்களில் கோவிட் பரவல் அதிகரித்து வரும் காரணத்தால், தேவை யில்லாமல் மக்கள் நடை மேடைகளில் கூடுவதை ரயில்வே ஊக்கப்படுத்து வதில்லை. பொது மக்கள் நலன் கருதியே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மார்ச் 2020-ல் ரயில்வேயின் பல்வேறு மண்டலங்களில் பிளாட்ஃபார்ம் டிக்கெட்டு களின் விலை உயர்த்தப்பட்டது. பின்னர் இது விலக்கிக் கொள் ளப்பட்டது. பண்டிகைகளின் போதும் இவ்வாறு செய்யப் பட்டுள்ளது.

ரயில் நிலையங்களில் கூட்டத்தை கட்டுப்படுத்துவது மண்டல ரயில்வே அதிகாரி யின் பொறுப்பாகும். குறிப்பிட்ட சமயங்களில் நடைமேடை அனுமதி சீட்டின் விலையை உயர்த்திக்கொள்ள 2015-ம் ஆண்டு முதல் மண்டல ரயில்வே அலுவலர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தெரிவித்துள் ளது.



**இராமநாதபுரம் மாவட்டம், திருவாடானை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தேதிபட்டினம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளிவளாகத்தில் உள்ள வாக்குச் சாவடி மையங்களில் 05.03.2021 அன்று மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித் தலைவர் தினேஷ் பொன்ராஜ் நேரில் ஆய்வு செய்தார்.**

# அதிமுக கூட்டணியில் பாஜகவுக்கு 20 தொகுதிகள்

சென்னை,மார்ச்6-

அதிமுக கூட்டணியில் பாஜகவுக்கு 20 சட்டப் பேரவைத் தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. இடைத்தேர்தல் நடைபெறும் கன்னியாகுமரி மக்களவைத் தொகுதியும் பாஜகவுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

இதற்கான ஒப்பந்தம் வெள்ளிக்கிழமை இரவு கையெழுத்தானது. தொகுதிப் பங்கீட்டு ஒப்பந்தத்தில் அதிமுக ஒருங்கிணைப்பாளர் ஓ. பன்னீர்செல்வம், இணை ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி கே. பழனிசாமி, பாஜக தேசிய பொதுச் செயலாளர் சிடிரவி, மாநிலத் தலைவர் எல். முருகன் ஆகியோரும் கையெழுத்திட்டுள்ளனர்.

இது தொடர்பாக அதிமுக தலைமை அலுவலகம் வெள்ளிக்கிழமை வெளியிட்ட தொகுதிப் பங்கீடு குறித்த அறிக்கை: தமிழகத்தில் வரும் ஏப்6-இல் நடைபெறவுள்ள சட்டப்பேரவைத் தேர்தலை அதிமுக, பாஜக கூட்டணி அமைத்து சந்திப்பது என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது.

அதிமுகவுக்கும் பாஜக வுக்கும் இடையே வெள்ளிக்கிழமை ஏற்பட்ட ஒப்பந்தப்படி அதிமுக தலைமையிலான கூட் டணியில் பாஜகவுக்கு 20 சட்டப்பேரவைத் தொகுதிகள் ஒதுக்கத் தீர்மானிக்கப் பட்டுள்ளது. அதேபோல் ஏப்6-ஆம் தேதி நடைபெற உள்ள கன்னியாகுமரி மக்களவை இடைத் தேர்தலில் போட்டியிடும் பாஜக வேட்பாளருக்கு அதிமுக தனது முழு ஆதரவு அளிக்கும் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

### பெண் ஐபிஎஸ் அதிகாரி பாலியல் புகாரில்

# டிஜிபி மற்றும் துணைபோன எஸ்.பி இருவரையும் இடைநீக்கம் செய்யவேண்டும்

### கே.பாலகிருஷ்ணன் கடிதம்



சென்னை,மார்ச்6-

பெண் ஐபிஎஸ் அதிகாரிக்கு பாலியல் தொல்லை கொடுத்ததாக எழுந்த புகாரில் டிஜிபி மற்றும் அவருக்கு ஆதரவாக நின்ற எஸ்பி இருவரையும் சஸ்பெண்ட் செய்ய வேண்டும் என காவல்துறை தலைவர் டிஜிபிக்கு கேபாலகிருஷ்ணன் கடிதம் எழுதியுள்ளார்.

இதுகுறித்து மார்க் சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் செயலா ளர் கேபால கிருஷ்ணன் காவல்துறை தலைவருக்கு இன்று எழுதியுள்ள கடித விவரம் வருமாறு:

கீழ்க்கண்ட கோரிக்கை களை தங்களது உடனடி நடவடிக்கைக்காக முன்வைக்கி றோம்.

புகார் கொடுத்துள்ள பெண் ஐபிஎஸ் அதிகாரிக்கு முழுமையான பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும்

குற்றம் சாட்டப்பட்ட டிஜிபியையும் அவருக்கு துணை போன எஸ்பியையும் உடனடியாக பணி இடைநீக்கம் செய்ய வேண்டும்

உயர் நீதிமன்ற கண்காணிப்பில் விசாரணை நடைபெறுவதை உறுதி செய்ய வேண்டும். பணியிட பாலியல் துன்புறுத்தல் குற்றத்தில் இருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம் 2013 பிரிவுகள் எதுவுமே முதல் தகவல் அறிக்கையில் இடம் பெறவில்லை. பொருத்தமான பிரிவுகளை இணைக்க வேண்டும்.

2013 சட்டத்தின்படி காவல் துறையிலும் உள் புகார் குழுவை (Internal Complaints Committee) உடனடியாக அமைத்திட வேண்டும்.

அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கத்தினர் 54 பேர் மீது காவல்துறையினர் பதிவு செய்துள்ள வழக்கினை ரத்து செய்ய வேண்டும்.

இவ்வழக்கினை குறிப் பிட்ட காலத்திற்குள் விரைந்து முடித்திட வேண் டும்".

இவ்வாறு அவர் கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

### வரி வருவாய் குறைந்து விடும் என்பதால் தயக்கம்

# ஜிஎஸ்டிக்குள் கொண்டு வந்தால் பெட்ரோல் லிட்டர் ரூ.75, டீசல் லிட்டர் 68 ஆகக் குறையும்

### எஸ்பிஐ வங்கி ஆய்வில் தகவல்

மும்பை,மார்ச்6-

ஜிஎஸ்டி வரிமுறைக்குள் பெட்ரோல், டீசலைக் கொண்டு வந்தால், பெட்ரோல் லிட்டர் ரூ75 ஆகவும், டீசல் ரூ68 ஆகவும் குறையும். ஆனால், அரசியல் ரீதியாக அதைச் செய்ய விருப்பமில்லை என்று ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியாவின் பொருளாதார வல்லுநர்கள் ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை உயர்வால், பெட்ரோல், டீசல் விலை கடந்த இரு வாரங்களுக்கு முன் நாள்தோறும் உயர்த்தப்பட்டு வந்தது. தொடர்ந்து 12 நாட்கள் விலை உயர்த்தப்பட்டதால், ராஜஸ்தான், மத்தியப் பிரதேசத்தில் பெட்ரோல் விலை லிட்டர் ரூ100 ஆகவும், டீசல் விலை 88 ரூபாய்க்கும் மேல் அதிகரித்தது.

அதிகரித்து வரும் விலை உயர்வால் மக்களின் சிரமத்தைக் குறைக்க அசாம், திரிபுரா, மேகாலயா உள்ளிட்ட சில மாநிலங்கள் வரியைக் குறைத்தன. பெட்ரோல், டீசலை ஜிஎஸ்டி வரிமுறைக்குள் கொண்டுவந்தால், விலை குறையும் என கருத்து தொடர்ந்து இருந்து வருகிறது.

எஸ்பிஐ வங்கியின் பொருளாதார வல்லுநர்கள் குழு நடத்திய ஆய்வு அறிக்கை வெளியிட்டுள்ளது. அதில் கூறப்பட்டுள்ளதாவது:

பெட்ரோல், டீசல் எரிபொருளை ஜிஎஸ்டி வரி முறைக்குள் கொண்டுவர வேண்டும் என்று நீண்டகாலமாக கோரிக்கை விடுக்கப்பட்டு வருகிறது. ஜிஎஸ்டி வரிக்குள் பெட்ரோலைக் கொண்டு வந்தால் பெட்ரோல் லிட்டர் ரூ75 ஆகவும், டீசல் ரூ68 ஆகவும் குறையக்கூடும்.

ஆனால், ஜிஎஸ்டி வரிக்குள் பெட்ரோல், டீசலைக் கொண்டுவந்தால், மத்திய அரசுக்கும், மாநில அரசுகளுக்கும் வரி வருவாய் கடுமையாகப் பாதிக்கும். குறிப்பாக ஜிடிபியில் 0.4 சதவீதம் அல்லது ரூஒரு லட்சம் கோடி வரிவருவாய் இழப்பு ஏற்படும். இந்த கணிப்பு என்பது கச்சா எண்ணெய் விலை பேரல் 60 டாலராக இருந்தபோது கணிக்கிடப்பட்டுள்ளது.

தற்போது ஒவ்வொரு மாநிலமும், பெட்ரோல், டீசலுக்கு ஒவ்வொரு விதமான வரியை விதிக்கின்றன. மத்தியஅரசு தனியாக தனதுபங்கிற்கு உற்பத்தி வரி, செஸ் வரியை விதிக்கின்றன. இதனால் ஒரு சில மாநிலங் களில் பெட்ரோல் லிட்டர் 100 ரூபாயைக் கடந்து விட்டது.

பெட்ரோல், டீசல் எரிபொருளை ஜிஎஸ்டி வரிக்குள் கொண்டு வர வேண்டும் என்று நீண்ட காலமாக ஆலோசிக்கப்பட்டு வருகிறது. ஆனால், இதை செயல்படுத்த அரசியல் ரீதியாக விருப்பமில்லாமல் கிடப்பில் இருந்து வருகிறது. ஏனென்றால் மத்திய அரசுக்கும், மாநில அரசுகளுக்கும் வரி வருவாய் ஈட்டித் தருவதில் பெட்ரோல், டீசல் மற்றும் கச்சா எண்ணெய் முக்கியமான காரணி என்பதால், அதை ஜிஎஸ்டி வரிக்குள் கொண்டுவருவதற்கு தயக்கம் காட்டுகின்றனர்.

தற்போது பெட்ரோல், டீசல் மீது மத்திய அரசு விதிக்கும் உற்பத்தி வரி, செஸ், வாட் வரி, கூடுதல் வரி, போக்குவரத்துக் கட்டணம், டீசல் கமிஷன் உள்ளிட்டவை சேர்த்து விற்பனை செய்யப்படும்போது கடுமையாக விலை உயர்வைச் சந்திக்கிறது.

ஜிஎஸ்டி வரிக்குள் கொண்டு வருவதாக ஊகம் செய்தால், டீசலுக்கு போக்குவரத்து கட்டணம் லிட்டர் ஒன்றுக்கு ரூ7.25 ஆகவும், பெட்ரோலுக்கு ரூ3.82 ஆகவும், டீசல் கமிஷன் டீசலுக்கு லிட்டர் ரூ2.53, பெட்ரோலுக்கு ரூ3.67 ஆகவும் இருக்கிறது. இதுதவிர பெட்ரோலுக்கு ரூ30 ஆகவும், டீசலுக்கு ரூ20 ஆகவும் விதிக்கப்படும் செஸ் வரி சமபங்காக மத்திய மாநில அரசுகள் பிரித்துக்கொள்ளும், ஜிஎஸ்டி வரி 28 சதவீதம் விகிக்கப்படக்கூடும். இதன் மூலம் பெட்ரோல் லிட்டர் ரூ75 ஆகவும், டீசல் லிட்டர் ரூ68 ஆகவும் குறையக்கூடும்.

சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை ஒரு டாலர் உயரும்போது, பெட்ரோல் விலை லிட்டருக்கு 50 பைசாவும், டீசல் லிட்டர் ரூ1.50 அதிகரிக்கும். ஆனால், இவை அனைத்தும் ஜிஎஸ்டி வரிக்குள் கொண்டுவரப்பட்டால், நுகர்வோர்கள் தற்போது வாங்கும் விலையிலிருந்து பெட்ரோல் ,டீசல் விலையில் லிட்டருக்கு ரூ30 குறையும். அதேநேரத்தில் மத்திய அரசுக்கும், மாநில அரசுகளுக்கும் வரிவருவாயில் பெரும் இழப்பு ஏற்படும்.

RNI 42728/1987 REGD. No.TN/CNI GPO/076/2020-2022
WPP No. TN/PMG(CCR)/WPP 643/20-22





இ.யூ. முஸ்லிம் லீக் சேலம் 53வது டிவிஷன் நிர்வாகிகள் தேர்வு கூட்டம் சேலம், லைன்மேடு, பிறை வீதியில் 5.3.2021 வெள்ளி இரவு மாவட்ட துணைத் தலைவர் ஆட்டோ நஸீர் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட பொருளாளர் ஹன்னு (எ) சாதிக் பாட்சா, மாவட்ட துணைத் தலைவர் சிராஜ் பாய், தெற்கு சட்டமன்ற தொகுதி அமைப்பாளர் அலாவுதீன், வடக்கு சட்டமன்ற அமைப்பாளர் எம்.பி.கே. பாரூக், ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. 53வது வட்ட தலைவராக எஸ்.எம். சேட்டு, செயலாளராக ஒய். அமானுல்லாகான், பொருளாளராக இசட். நஸீர் அஹமது, துணைத் தலைவராக அப்துல் ரவூப் நிஸ்தார், தெற்கு தொகுதி துணை அமைப்பாளராக பி.எஸ். ஜமால் மற்றும் நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர். இந்நிகழ்வில் மாவட்ட முன்னாள் செயலாளர் ஒய். லியாகத்அலி, யூத் லீக் நிர்வாகிகள் இப்ராஹிம், நயாஸ், எஸ்.டி.யூ. நிர்வாகிகள் முஸ்தபா, ஷாகுல், அஷ்ரப் ஆகியோர் கலந்து கொண்டனர்.



தஞ்சை மருத்துவக் கல்லூரி புதிய முதல்வராக பொறுப்பேற்றுள்ள டாக்டர் ரவிக்குமாரை இ.யூ. முஸ்லிம் லீக் தஞ்சை தெற்கு மாவட்டம் சார்பாக மாவட்டச் செயலாளர் எஸ்.எம். ஜெய்னுல் ஆபுதீன், மாவட்ட துணைத் தலைவர் பி.எஸ்.ஹெச். ரபீக்தீன், தஞ்சை நகர பொறுப்பாளர்கள் செய்யது முகைதீன், முஹம்மது கஜ்ஜாலி, சேது பாவா சத்திரம் பிரைமரி தலைவர் உமர் கத்தாப் ஆகியோர் 5.3.2021 அன்று நேரில் சந்தித்து சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தனர்.

## ''டி.டி நெக்ஸ்ட்'' ஆங்கில நாளிதழுக்கு தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் சிறப்புப் பேட்டி...

(முதல் பக்கத் தொடர்ச்சி)

சக்தியும்வளரச் செய்யப்படாது. பெரியார், அண்ணாமற்றும் கலைஞர் காலத்திலிருந்தே, சர்வாதிகார மற்றும் மேலாதிக்க போக்குகளுக்கு எதிரான எதிர்ப்பில் தி.மு.க உறுதியுடன் இருந்து வருகிறது.

**கேள்வி : "உங்கள் தொகுதியில் ஸ்டாலின்' என்ற புதிய திட்டத்தைநீங்கள் தொடங்கி யுள்ளீர்கள், ஆயிரக் கணக்கான மனுக்களை சேகரித்து 100நாட்களில் தீர்வு காணப்படும் என்று உறுதியளித்தீர்கள். உங்கள் அனுபவம்எப்படி இருந்தது ?**

**மு.க.ஸ்டாலின் :** நாங்கள் மக்களோடு தொடர்பு கொண்டபோது, தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொரு தனிநபரும் பிரச்சனைகளோடு போராடுவதைக் கண்டோம். அவர்கள் பிரச்சனையை தீர்ப்பதில் அதி.மு.க. அரசு தோல்வியுற்றதால் மக்கள் எங்களிடம் உதவி கேட்கிறார்கள். ஆளும் அதி.மு.க. அரசின் மீது நம்பிக்கை வைப்பதை விட மக்கள் எங்கள் மீது அதிக நம்பிக்கை வைத்துள்ளார்கள். கடந்த ஒரு மாதத்தில் மாநிலம் முழுவதும் கிட்டத்தட்ட அனைத்து சட்டமன்றத் தொகுதிகளையும் சென்று மக்களை சந்தித்து விட்டேன். மக்களை நேரடியாக சந்தித்து அவர்களின் பிரச்சனையை போக்குவதில் நேரடியாக ஈடுபடுவது மகிழ்வைத் தருகிறது

**கேள்வி : பிரதமர் நரேந்திர மோடியின் சென்னை விஜயம் அ தி மு க வி ல் , கு றி ப் பா க முதல்வர் வேட்பாளர் பிரச்சினை தொடர்பாக கூறப்படும் வேறுபாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைத்ததாக ஒரு ஊகம் உள்ளது. தங்கள் கருத்து ?**

**மு.க.ஸ்டாலின் :** அதி.மு.க. அவர்களின் உடலையும் ஆன்மாவையும் மத்தியில்உள்ள பா.ஜ.க. அரசுக்கு விற்றுவிட்டது. டெல்லியில் இருந்து, பா.ஜ.க. அதிமுகவின் உள் விஷயங்கள் மற்றும் அரசியலைக் கட்டுப் படுத்துகிறது. அவர்கள் சொந்த மாக விஷயங்களைத் தீர்க்கும் திறனை முற்றிலுமாக இழந்து விட்டார்கள். இந்த அடிமை அரசாங்கம் குழப்பமடைந்து, தங்கள் எஜமானர்கள் என்ன செய்ய வேண்டுமோ என்கிறார்களோ அதைச் செய்கிறார்கள்.

**கேள்வி : பா.ஜ.க. தலைவர்கள்திராவிடக்கட்சிகள் இல்லாத ஒரு தமிழ்நாட்டை உருவாக்குவோம் என்று பகிரங்கமாக அறிவித்துள்ளனர். எதிர்காலத்தில் பா.ஜ.க. போன்ற ஒரு தேசியகட்சி உங்கள் பரம எதிரியாக மாறுவதைநீங்கள் காண்பீர்களா ?**

**மு.க.ஸ்டாலின் :** நீங்கள் திராவிடகட்சிகளை குறைத்து மதிப்பிடுகிறீர்கள் . இந்தத் தேர்தல் தமிழர்களுக்கும் தமிழகத்தை ஆள விரும்புவோருக்கும் இடையில் உள்ளது. தமிழகத்திற்கு வெளியே எந்தஅதிகாரத்திற்கும் தலைவணங்கவோ வளைந்து கொடுக்கவோ மாட்டோம் என்பதை தமிழக மக்கள் காண்பிப்பார்கள் பா.ஜ.க. மீதான அதிமுகவின் கூட்டணி அதை மாற்றாது. அண்ணாவின் பெயரைக் கொண்ட ஒரு கட்சி அவரின் கொள்கைக்கு எதிரானவர்களுடன் அவ்வாறு செய்வது என்பது துரதிர்ஷ்டவசமானது.

**கேள்வி : தி.மு.க. தேர்தல் அறிக்கையில் எப் போதும் எதிர்பார்ப்பினை உ ரு வா க் கி யு ள் ள து . இந்த முறை கல்விகடன் தள்ளுபடி செய்வதாக உறுதி யளித்துள்ளீர்கள். மேலும் என்ன வகையான ஆச்சரியங்களை எதிர்பார்க்கலாம் ?**

**மு.க.ஸ்டாலின் :** எங்கள் வாக்குறுதியில் மிக உயர்ந்த மூன்று விஷயங்கள்தமிழக மக்களின் உரிமைகளைப் பாதுகாத்தல், மக்களைக் கேட்பது, அவர்களுக்காக அங்கே இருப்பது எதுவாக இருந்தாலும் ,அரசாங்கத்தின் ஆதரவைப் பெறும் போதுயாரும் பின்வாங்காமல் பார்த்துக் கொள்வது ஆகியவை அடங்கும். எங்கள் அறிக்கையானது மக்களின் அபிலாஷைகளையும் தேவை களையும் பிரதிபலிக்கும். குறுகியகால பெரிய வாக் கெடுப்பிற்காக கொடுக்கும் வாக்குறுதிகளை விட, தமிழகத்திற்குஎன்ன தேவை என்பது ஒரு முக்கியமான பார்வை. தமிழ்நாட்டிற்கான எனது பார்வைமார்ச் 7 ஆம் தேதி திருச்சியில் வெளி யிடுவேன், இது தமிழ் நாட்டின் ஒவ்வொரு மாநிலத் துறையையும் நாட்டிலேயேசிறந்ததாக மாற்று வதற்கான எங்கள் திட்டத்தை கோடிட்டுக் காட்டும்.

இவ்வாறு தி.முக தலைவர் முக ஸ்டாலின் பேட்டியளித்தார்.

## தலைமை நிலைய அறிவிப்பு

### தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் - 2021

**இ.யூ. முஸ்லிம் லீக் மாவட்டத் தலைவர் / செயலாளர் கவனத்திற்கு...**

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் எதிர்வரும் ஏப்ரல் 6 ஆம் தேதி நடைபெறுகின்றது. இத்தேர்தலுக்கான இ.யூ. முஸ்லிம் லீக் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர்களின் முகவரி, அலைபேசி எண் விவரத்தை 8.3.2021க்குள் தலைமை நிலையத்திற்குள் அனுப்பிடவும், அதன் விவரத்தை மாவட்ட தி.மு.க. செயலாளர் / பொறுப்பாளர்கள் மற்றும் தொகுதியில் போட்டியிடும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களிடமும் அளித்திடுமாறு அனைத்து மாவட்ட தலைவர் / செயலாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

தி.மு.க. கூட்டணியில் இ.யூ. முஸ்லிம் லீகிற்கு 3 சட்டமன்ற தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. தாய்ச்சபையின் வேட்பாளர்களின் வெற்றிக்கு துணை நின்றிட அனைத்து மாவட்டங்களிலிருந்தும் கீழ்க்கண்ட வங்கி எண்ணிற்கு

| | | |
|---|---|---|
| BANK NAME | : | UNION BANK OF INDIA, |
| BRANCH NAME | : | CHENNAI MAIN - 2 |
| ACCOUNT NAME | : | IUML TN ELECTION FUND |
| ACCOUNT NUMBER | : | 034811100002661 |
| IFSC CODE | : | UBIN0803481 |
| SWIFT CODE | : | UBININBBMAD |

தேர்தல் நிதி வழங்கிடுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

ஒப்பம்,
**கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் எம்.எல்.ஏ.,**
**மாநில பொதுச் செயலாளர்**
**இந்திய யூனியன் முஸ்லிம் லீக்**

### திருச்சி சிருகனூரில் மார்ச் 7 ஞாயிற்றுக்கிழமை

# விடியலுக்கான முழக்கம் - தி.மு.க. மாபெரும் பொதுக்கூட்டம்

## மு.க. ஸ்டாலின் தலைமையில் நடைபெறுகிறது

திருச்சி, மார்ச் 6 -

திருச்சி - சென்னை தேசிய நெடுஞ்சாலையில் சிறுகனூர் அருகே 700 ஏக்கரில் பொதுக் கூட்டத்துக்கான பிரம்மாண்ட ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.







இந்நிலையில் இந்தப் பொதுக் கூட்டம் தொடர்பாக, திமுக தலைவர் முக.ஸ்டாலின் கட்சியினருக்கு எழுதியுள்ள மடல்: ஒட்டுமொத்த தமிழகத்தின் ஒற்றை எதிர்பார்ப்பு, ஆட்சி மாற்றம். அதுவும், பத்தாண்டுகால அதிமுக ஆட்சியால் இருண்டு பாழாகிக் கிடக்கும் தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் வேறுபாடின்றி வெளிச்சம் பாய்ச்சும் வல்லமை மிக்க திமுக தலைமையிலான ஆட்சி அமைய வேண்டும் என்பதே தமிழக மக்களின் ஆவலான எதிர்பார்ப்பாக உள்ளது.

தமிழக மக்களின் நம்பிக்கை மிகுந்த எதிர்பார்ப்புக்கு செயல் வடிவமும் வண்ணமும் தரும் இலட்சியப் பிரகடனம் தீரர் கோட்டமாம் திருச்சியில் நடைபெறவுள்ள சிறப்புப் பொதுக்கூட்டத்தில் வெளியிடப்படவுள்ளது.

தமிழகத்தின் விடியலுக்கான முழக்கம்' என்னும் தலைப்பில் (மார்ச் 7) ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்குத் தொடங்கி இரவு 8 மணி வரை நடைபெறவுள்ள வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்தப் பொதுக்கூட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகளுடன் நகரம், ஒன்றியம், பேரூர் ஆகிய கழக அமைப்புகளைச் சேர்ந்த அனைத்து நிர்வாகிகளும், வட்டக் கழக நிர்வாகிகள், என ஏறத்தாழ 1 கோடிக்கும் அதிகமான உறுப்பினர்கள் பங்கேற்கவுள்ளனர்.

இந்தக் கூட்டத்தில், வெளியிடப்படும் பிரகடனத்தில் உள்ளவற்றை செய்து காட்டுவோம் என்ற உறுதிமொழியை மக்கள் முன் வழங்க இருக்கிறேன். ஆட்சிக்கு வந்தபிறகு அதை நிறைவேற்றாவிட்டால், பொதுமக்கள் கேள்வி கேட்கலாம் என்ற உரிமையையும் வழங்க இருக்கிறேன்.

மார்ச் 7-இல் லட்சியப் பிரகடனம் வெளியீடு, மார்ச் 10-இல் வெற்றி வேட்பாளர்கள் பட்டியல் வெளியீடு, மார்ச் 11-இல் களத்தின் கதாநாயகனான தேர்தல் அறிக்கை வெளியீடு, அதன்பின் பரப்புரைப் பயணம் எனப் புயல் வேகத்தில் செயல்பட வேண்டியுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

பொதுக் கூட்ட ஏற்பாடுகளை கட்சியின் முதன்மைச் செயலர் கே.என். நேரு, இரவு, பகலாக சிறுகனூர் மைதானத்தில் முகாமிட்டு பணிகளை செய்து வருகிறார்.







**MANICHUDAR TAMIL DAILY** Printed and Published by **K.A.M. MUHAMMED ABUBACKER** on behalf of Madras Media Private Limited from No. 36, Maraikayar Lebbai Street, Mannady, Chennai - 600 001 and printed at J.M. Process, No. 29, V.N. Dass Road, Border Thottam, Mount Road, Chennai - 600 002. E-mail : manichudardaily@gmail.com | Ph : 044 - 2521 7890 / 2521 7786 **Editor : Prof. K.M. KADER MOHIDEEN, Ex. M.P.**